**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 16–ம் நாள்
2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01–ம் நாள் வெள்ளிக்கிழமை
*******

<u>இடைமனு எண். 3/2025–ல் அசல் வழக்கு எண். 186/2023</u>

ராமலிங்கம் .....மனுதாரர்/ பிரதிவாதி

...எதிர்...

ஞானகுணாளன் ......எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 21.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S. சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியிருந்து, எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

<u>உத்தரவு</u>

அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக 16.12.2024–ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–9, விதி–7 மற்றும் 151ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் இந்த மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கில் மனுதாரர்/எதிர்வாதி மீது எதிர்மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 06.12.2024 அன்று கெடுப்போடப்பட்டு இருந்தது. மேலும் எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்/எதிர்வாதி மீது இடைக்கால தடை கோரி IA.No.2/2023 ல் மனு கொடுத்து அதிலும் எதிர்உரை 06.12.2024 அன்று கெடுப்போடப்பட்டு இருந்தது. 06.12.2024 அன்று மனுதாரர்/எதிர்வாதிக்கு கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டு வீட்டில்

படுத்தப்படுக்கையாக இருந்த காரணத்தால் மேற்படி எதிர்வழக்குரை மற்றும் எதிர் உரை தாக்கல் செய்ய முடியவில்லை. மேற்படி 06.12.2024 தேதியில் எதிர்வழக்குரை மற்றும் எதிர்உரை தாக்கல் செய்யாததால் மனுதாரர்/எதிர்வாதியை ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இந்த வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ நீதிமன்றத்தில் முன்னிலையாகமல் இல்லை. கடந்த 06.12.2024 அன்று மனுதாரர் பெயரில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவாக வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

<u>3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்?</u>

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கக்கூடியதா? என்பதேயாகும்.

இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

மனுதாரருக்கு எதிராக கடந்த 06.12.2024 பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டு வீட்டில் படுத்தப்படுக்கையாக இருந்த காரணத்தால், மேற்படி வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை மற்றும் எதிர்உரை தாக்கல் செய்யமுடியவில்லை. மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ மேற்படி தேதியில் எதிர்வழக்குரை மற்றும் எதிர்உரை தாக்கல் செய்யாமலும், நீதிமன்றம் ஆஜராகமல் இருக்கவில்லை என்றும், எனவே, மனுதாரருக்கு எதிராக 06.12.2024 பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். வழக்கு ஆவணங்களில் பரிசீலனை செய்கையில் அசல் வழக்கில் ஆஜராகாத காரணத்தால் கடந்த 06.12.2024 தேதியில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இருதரப்பு வாதங்களும் கேட்டு முடிவு செய்வதுதான் நீதியின் நலனுக்கும், இயற்கை நீதிக்கும் உகந்தது என்று இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர் செலவுத்தொகையாக ரூ.500 ஐ 11.08.2025 தேதிக்குள் எதிர்மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும். அழைக்க – 12.08.2025.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று (01.08.2025) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.01 18:19:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சீர்காழி

**<u>பின் இணைப்பு</u>**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> இல்லை
<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> இல்லை

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.01 18:19:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சீர்காழி

நேரிய/வரைவு உத்தரவு
இடைமனு எண்.03/2025–ல்
அசல் வழக்கு எண்.186/2023
நாள்–01.08.2025